முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**OP No. 18/2024**

**நாள்.10.04.2026**

CW1 – திருமதி.மரகதம்மாள் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

1, 2 எதிர்கோரிக்கைதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை

தேசிய நெடுஞ்சாலைக்காக நிலம் ஆர்ஜிதம் செய்த விவரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். நிலம் எடுப்பது சம்மந்தமாக 3A அறிக்கை தினசரி நாளிதழில் வந்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால் பின்னால் தெரிந்து கொண்டேன். Special DRO முன்பு விசாரணைக்கு ஆஜராகி எங்களது ஆட்சேபனைகளை தெரிவித்தேன் என்றால் சரிதான். Special DRO பிறப்பித்த உத்தரவை எதிர்த்து, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் 2013 ம் ஆண்டு நில ஆர்ஜித சட்டப்படி இழப்பீடு நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று மனு கொடுத்தேன் என்றால் சரிதான். அதன்படி, Special DRO விலை நிர்ணயம் செய்து, இழப்பீடு தொகை கொடுத்தார் என்றால் நாங்கள் கேட்ட தொகை கொடுக்கவில்லை, மிக குறைவாக கொடுத்தார். எனது நிலம் அனைத்தும புஞ்சை நிலம் என்றால் இல்லை, நஞ்சை நிலம்.

Special DRO உத்தரவிற்கு பின், மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் முறையாக மாவட்ட ஆட்சியரிடம் Special DRO உத்தரவை எதிர்த்து மனு செய்திருக்க வேண்டும் என்றாலும், அவ்வாறு மனு செய்யாமல், நேரடியாக நீதிமன்றத்தில் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளது, சட்டப்படி செல்லத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல.

**3 ம் எதிர்கோரிக்கைதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.10 17:57:10 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .